அன்னை பூமி

# மாலை யுகம்

Maalai Yugam Daily e-Paper https/www.myvtdaily.com நாளிதழ்

Sun raise has many News Papers in English, but Sun sets should end with a News Paper

VIRTUAL TIMES
ENGLISH EVENING DAILY

RNI No.TNTAM/2016/73487

மலர் - 9 | இதழ் - 299 | சென்னை | வியாழக்கிழமை | 16.01.2025 | விலை.4- | பக்கம் - 4

Vol-9 | Issue - 299 | Chennai | Thursday | 16.01.2025 | Price.4- | page -4

## உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு கோலாகலமாக தொடங்கியது!

அலங்காநல்லூர் : ஜன.16–

உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார். இந்த நிகழ்வில் அமைச்சர் மூர்த்தி உள்ளிட்ட அமைச்சர்களும் பங்கேற்றனர். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் 1,000 காளைகள் பாரம்பரியமிக்க வாடிவாசல் வழியாக அவிழ்த்துவிட விழா குழுவும், மாவட்ட நிர்வாகமும் முடிவு செய்துள்ளனர். 500 மாடுபிடி வீரர்களும் களம் காண்கின்றனர்.



முன்னதாக மாவட்ட ஆட்சியர் சங்கீதா தலைமையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். தொடர்ந்து அலங்காநல்லூர் கோவில் காளைகள் வாடிவாசல் வழியாக அவிழ்த்துவிடப்பட்டன. அதனை தொடர்ந்து ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சிறந்த வீரர், காளைக்கு பரிசு; உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த காளையாக தேர்தெடுக்கப்படும் காலைக்கும் முதல்வர் சார்பில் டிராக்டர் வழங்கப்படுகிறது, சிறந்த வீரராக தேர்தெடுக்கப்படும் மாடுபிடி வீரருக்கு துணை முதல்வர் சார்பில் கார் வழங்கப்படுகிறது. மேலும் தங்கக்காசு, வெள்ளிக்காசு, கட்டில், பீரோ, மெத்தை, அண்டா, பித்தளை பொருட்கள் என மேலும் பல பரிசு பொருட்கள் வீரர்கள் மற்றும் காளைகளுக்கு வழங்கப்பட இருக்கிறது.

காளைகளுக்கு மருத்துவ பரிசோதனை; முன்னதாக ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் காளைகளுக்கு மருத்துவ பரிசோதனை நடைபெற்று தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. 7 கவுண்டர்கள் மூலம் கால் நடை மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாடுபிடி வீரர்களுக்கும் மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகிறது.

தயார் நிலையில் மருத்துவத்துறை; ஜல்லிக்கட்டு போட்டியில் காயமடையும் காளைகளுக்கு, மாடு பிடி வீரர்களுக்கும் சிகிச்சை அளிக்க 200 மருத்துவர்கள், 60 கால்நடை மருத்துவர்கள், செவிலியர்கள் தயார் நிலையில் உள்ளனர்.


2000 போலீசார் பாதுகாப்பு; அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் மதுரை காவல் ஆணையர் தலைமையில் 2,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## இந்தியாவின் லட்சிய விண்வெளிப் பயணங்களுக்கு இது குறிப்பிடத்தக்க சான்று: இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு குடியரசு தலைவர்' பிரதமர் மோடி வாழ்த்து!!

டெல்லி : ஜன.16

இஸ்ரோ விஞ்ஞானிகள், விண்வெளி சகோதரர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். PSLV சி60 ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பப்பட்ட SpaDeX திட்டத்தின் 2 செயற்கைக்கோள்களும் டாக்கிங் முறையில் வெற்றிகரமாக இணைக்கப்பட்டதாக இஸ்ரோ இன்று காலை அறிவிப்பு வெளியிட்டது. 1.5 கி.மீ. இடைவெளியில் இருந்த செயற்கைக்கோள்கள் 50 மீட்டராகவும், பிறகு 15 மீட்டராகவும், இறுதியில் 3 மீட்டராகவும் குறைத்து இணைக்கப்பட்டுள்ளது. மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான், சந்திரயான் 4 திட்டங்களுக்கு





டாக்கிங் முக்கியமானது.

அமெரிக்க, ரஷ்யா, சீனாவை தொடர்ந்து ஸ்பேஸ் டோக்கிங் முறையை வெற்றிகரமாக செயல்படுத்திக்காட்டிய 4வது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது. ஷிஜீணீஞ்மீனீ திட்டத்தின் வெற்றி இஸ்ரோ தலைவராக பொறுப்பேற்றுள்ள நாராயணன் அவர்களின் முதல் வெற்றியாக பதிவாகி உள்ளது. இந்த நிலையில், இஸ்ரோவின் சாதனைக்கு விஞ்ஞானிகள், விண்வெளி சகோதரர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அந்த பதிவில், "செயற்கைக்கோள்களை விண்வெளியில் இணைப்பதை வெற்றிகரமாக நிரூபித்ததற்காக இஸ்ரோவில் உள்ள நமது விஞ்ஞானிகளுக்கும், ஒட்டுமொத்த விண்வெளி சகோதரத்துவத்திற்கும் வாழ்த்துக்கள். இது வரும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளி பயணங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க சான்று," எனத் தெரிவித்துள்ளார்.

அதே போல் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள பதிவில், "ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றியடைந்தது வரலாற்று மைல்கல். விண்வெளி டாக்கிங் திறனை வெளிப்படுத்தும் 4வது நாடு இந்தியா. விண்வெளி ஆராய்ச்சிகள் இந்தியாவில் எதிர்கால முயற்சிகளுக்கு வழி வகுக்கும்," இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## விண்ணில் 2 செயற்கைக்கோள்களை இணைக்கும் இஸ்ரோவின் ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றி : 4வது நாடாக செயல்படுத்தி இந்தியா சாதனை!!

பெங்களூரு : ஜன.16–

விண்வெளியில் 2 விண்கலன்களை டாக்கிங் முறையில் இணைக்கும் வகையில், இஸ்ரோ செயல்படுத்தி வந்த 'ஸ்பேடெக்ஸ்' திட்டம் வெற்றி பெற்றதாக விஞ்ஞானிகள் தகவல் அளித்துள்ளனர். இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) பாரதிய அந்தரிக்ஷா ஸ்டேஷன் எனும் இந்திய ஆய்வு நிலையத்தை 2035ம் ஆண்டுக்குள் விண்ணில் நிறுவ முடிவு செய்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு முன்னோட்டமாக ஸ்பேடெக்ஸ் (SPADEX–Space Docking Experiment) எனும் திட்டத்தின் கீழ் விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் பரிசோதனையை மேற்கொள்ள இஸ்ரோ முடிவு செய்தது.



இதற்காக வடிவமைக்கப்பட்ட ஸ்பேடெக்ஸ் ஏ, ஸ்பேடெக்ஸ் பி ஆகிய 2 விண்கலன்களும் பிஎஸ்எல்வி சி60 ராக்கெட் மூலமாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த டிசம்பர் 30ம் தேதி ஏவப்பட்டு விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன. அதன்பின் அவ்விரு விண்கலன்களும் ஒரே சுற்றுப்பாதையில் குறிப்பிட்ட தூர இடைவெளியில் ஒன்றன்பின் ஒன்றாக வலம் வந்தன. இரட்டை விண்கலன்கள் தலா 220 கிலோ எடை கொண்டவையாகும். இரு விண்கலன்களுக்கு இடையேயான தொலைவை 20 கி.மீட்டரில் இருந்து படிப்படியாக குறைத்து அவற்றை ஜனவரி 9ம் தேதி ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டது.

அதற்கேற்ப விண்கலன்களின் தூரத்தை குறைக்க முயற்சிகள் செய்யப்பட்டன. அப்போது விண்வெளியில் புறச்சூழல் காரணமாக விண்கலன்களின் இயக்கத்தின் வேகம் எதிர்பார்த்ததை விட குறைந்துவிட்டது. இதனால் திட்டமிடப்பட்டிருந்த விண்கலன்கள் ஒருங்கிணைப்பு நிகழ்வு தாமதம் ஆனது. அதன்பின் புறச்சூழல் காரணிகளுக்கு தீர்வு காணப்பட்டு விண்கலன்களை நெருக்கமாக கொண்டு செல்லும் பணிகள் ஜனவரி 10ம் தேதி மாலை தொடங்கப்பட்டன.


அதன்படி முதலில் விண்கலன்களுக்கு இடையேயான தூரம் 1.5 கீ.மீட்டராக குறைக்கப்பட்டது. தொடர்ந்து இரண்டுக்கும் இடையேயான தொலைவானது சீரிய இடைவெளியில் 500 மீட்டர், 230 மீட்டர், 105 மீட்டர், 15 மீட்டர் என படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது. இறுதியாக இரு ஸ்பேடெக்ஸ் விண்கலன்கள் 3 மீட்டர் அளவில் மிக நெருக்கமாக கொண்டுவரப்பட்டன. இதையடுத்து ஸ்பேடெக்ஸ் இரட்டை விண்கலன்களின் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில், ஸ்பேடெக்ஸ் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. விண்வெளி டாக்கிங் பரிசோதனை திட்டத்தின் வழியே 2 செயற்கைக்கோள்களும் ஒன்றிணைக்கப்பட்டன. ஸ்பேடெக்ஸ் திட்டத்தின் வெற்றியால் இஸ்ரோ தலைவராக பொறுப்பேற்றுள்ள நாராயணன் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார். இந்த திட்டம் வெற்றி பெற்ற தன் மூலம் ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளை தொடர்ந்து விண்வெளியில் விண்கலன் ஒருங்கிணைப்பு தொழில்நுட்பத்தை கொண்ட 4வது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

## அலங்காநல்லூரில் காளைகளுடன் மல்லுக்கட்டும் வீரர்கள் : தங்க மோதிரம் வென்ற விஜயபாஸ்கரின் காளை; அடங்க மறுத்த நடிகர் சூரியின் கருப்பன்!!

மதுரை: ஜன.16–

உலக புகழ்பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடங்கியது. இந்தப்போட்டியை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார். உதயநிதியுடன் அவரது மகன் இன்பநிதியும் ஜல்லிக்கட்டுப் போட்டியைக் காண வந்துள்ளார். அவர்களுக்கு அமைச்சர்கள் மூர்த்தி, பிடி ஆர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா ஆகியோர் வரவேற்பு நல்கினர். 10 சுற்றுகளாக நடைபெறும் இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் ஒவ்வொரு சுற்றிலும் 50 வீரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் முட்டியதில் இதுவரை 13 பேர் காயமடைந்தனர். மாடுபிடி வீரர் 6, மாட்டின் உரிமையாளர்கள் 4, பார்வையாளர் 3 என மொத்தம் 13 பேர் காயம் அடைந்துள்ளனர். காளை முட்டி காயமடைந்த 7 பேர் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் மாடுபிடி வீரர்கள் 13 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 7 பேர் எடை குறைவு, 5 பேர் போலி ஆவணங்கள் வழங்கியதாக தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முதல் சுற்று முடிவில் சூர்யா 3 காளைகளை அடக்கி முதலிடத்தை பிடித்தார். தினேஷ், கண்ணன் மற்றும் கௌதம் ஆகியோர் தலா 2 காளைகளை அடக்கி 2வது இடத்தையும் பிடித்தனர். நடிகர் சூரியின் காளையான கருப்பணை யாராலும் அடக்கப்படவில்லை. அதேபோல் அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் கொம்பன் காளையும் வாடிவாசலில் சிறப்பான வேடிக்கையை காட்டி தங்க மோதிரத்தை வென்று அசத்தியது. இதனையடுத்து தொடங்கிய 2வது சுற்றில் அபி சித்தர் 9 காளைகளையும், விஜய் 6 காளைகளையும், விக்னேஷ் மற்றும் அருன் குமார் தலா 4 காளைகளையும் அடக்கினர். இதனிடையே அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 3வது இடத்தை பிடித்த மாடுபிடி வீரரான கார்த்தி என்பவரை மாவட்ட ஆட்சியர் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டார். இதையடுத்து 3ம் சுற்று போட்டிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

## ஜனவரி 18ம் தேதி 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை: ஜன.16–

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 16 மற்றும் 17ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும்




லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜனவரி 18ம் தேதி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஜனவரி 19ம் தேதி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போர் நிறுத்த ஒப்பந்தம் : காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வழிவகுக்கும் : இந்திய வெளியுறவுத் துறை

டெல்லி : ஜன.16–

காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. கடந்த 2023ம் ஆண்டு அக்டோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது வான்வெளி தாக்குதல் நடத்தினர். ஏராளமான இஸ்ரேலியர்கள் உயிரிழந்த இந்த தாக்குதலில், 250க்கும் மேற்பட்ட இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்தவர்களை ஹமாஸ் அமைப்பினர் சிறைபிடித்தனர். பதிலுக்கு ஹமாஸ் அமைப்பை குறிவைத்து



காசா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலுக்கு இதுவரை 44,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், பணயகைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும், போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகவும் இஸ்ரேல் அளித்த வரைவு ஒப்பந்தத்திற்கு ஹமாஸ் அமைப்பினர் ஒப்புதல் அளித்துள்ளனர். இதன் காரணமாக 15 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த இஸ்ரேல்ரூ ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வந்துள்ளது. போர் நிறுத்தத்தை தொடர்ந்தும், ஹமாஸ் பிடியில் சிக்கி இருக்கும் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். போர் நிறுத்த அறிவிப்பு காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை வரவேற்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், "காசாவில் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் மற்றும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். இது காசா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான மனிதாபிமான உதவிகளை வழங்க வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கவும், போர் நிறுத்தம் செய்யவும், பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர பாதைக்கு திரும்பவும் நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுத்து வந்தோம்," இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள

# சத்தீஷ்காரில் கண்ணி வெடிகுண்டு வெடித்ததில் 2 பாதுகாப்புப்படை வீரர்கள் காயம்!

சத்தீஸ்கர்: ஜன.16–
சத்தீஷ்காரில் கண்ணி வெடிகுண்டு வெடித்ததில் 2 பாதுகாப்புப்படை வீரர்கள் காயமடைந்துள்ளனர். இந்தியாவில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாக சத்தீஷ்கார் உள்ளது. இம்மாநிலத்தில், நக்சலைட்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில், சத்தீஷ்காரின் பீஜப்பூர் மாவட்டத்தின் பசகுடா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புட்கெல் கிராமத்தில் வழக்கமாக ரோந்து பணியில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது அங்கு நக்சலைட்டுகள் பதுக்கி வைத்திருந்த கண்ணி வெடிகுண்டு வெடித்தது. இதில் 2 பாதுகாப்புப்படை வீரர்கள் காயமடைந்தனர். இதையடுத்து சகவீரர்கள் அவர்களை மீட்டு பீஜப்பூர் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அப்பகுதியில் மேலும் சில கண்ணி வெடிகுண்டுகள் பதுக்கிவைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பாதுகாப்புப்படையினர் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக கடந்த 11ம் தேதி பீஜப்பூர் மாவட்டத்தின் மஹாதியோ காட்பகுதியில் நக்சலைட்டுகள் பதுக்கி வைத்திருந்த கண்ணி வெடிகுண்டு வெடித்ததில் ஒரு மத்திய பாதுகாப்புப்படை வீரர் காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிட்டி என்சிபிஏ ஆதி ஆனந்த் இசை கொண்டாட்டம் : டெல்லி' மற்றும் சென்னையில் நடைபெறவுள்ளது

சென்னை, ஜன.16–
இந்தியாவின் முதன்மையான கலாச்சார நிறுவனங்களில் ஒன்றான நிகழ்த்துக்கலைகளுக்கான தேசிய மையம் (நேஷனல் சென்டர் ஃபார் தி பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் என்சிபிஏ) அதன் வருடாந்திர பாரம்பரிய இசை விழாவான சிட்டி என்சிபிஏ ஆதி ஆனந்தை கடந்த வார இறுதியில் மும்பையில் தொடங்கியது.
ஒவ்வொரு ஆண்டும், இந்த விழா இந்திய இசையில் மிகவும் மதிக்கப்படும் சில பெயர்களின் இசை மரபுகளை ஒன்றிணைக் கிறது. . குரு சிஷ்ய பாரம்பரியம், இந்திய பாரம்பரிய இசைக்கு மிகவும் அடிப்படையானது. சிட்டி என்சிபிஏ ஆதி ஆனந்த் திருவிழாவின் மையமாக உள்ளது.
விழாவின் 14வது பதிப்பு, சிட்டி வங்கியின் ஆதரவுடன், மும்பை, டெல்லி மற்றும் சென்னை ஆகிய மூன்று நகரங்களில் தொடர்ச்சியான இசை நிகழ்ச்சிகளை வழங்க உள்ளது. டிசம்பர் 7 ஆம் தேதி NCPA யில் இந்த திருவிழா தொடங்கியது. 'Sazaur Awaz' வழங்கும் மேஸ்ட்ரோ ஷுஜாத் ஹுசைன் கான், திறமையான குழுவுடன் சிதார் மற்றும் குரல் இரண்டையும் தனக்கே உரிய பாணியில் கலந்து ஒரு



தனித்துவமான நிகழ்ச்சியை அரங்கேற்றினார். டிசம்பர் 8 ஆம் தேதி பின்வரும் கச்சேரிகள் நடைபெற்றன. 'சரோத் குயின்டெட்: மூன்று தலைமுறைகள், ஒரு மரபு', கச்சேரிகளுக்கு ஒரு சிறப்பு விருந்தாக இருந்தது. இதில் மேஸ்ட்ரோ அம்ஜத் அலி கான், சரோத் உலகில் ஒரு உயர்ந்த நபராக இருந்தார், அவருடன் அவரது மகன்கள் அமனும் இணைந்தார். அலி பங்காஷ் மற்றும் அயன் அலி பங்காஷ், அவரது பேரன்கள் அபீர் அலி பங்காஷ் மற்றும் ஜோஹான் அலி ஆகியோருடன் பங்காஷ். சேனியா பண்டாஷ் இசை வம்சாவளியின் நீடித்த பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பல தலைமுறை சரோட் குழுவை அவர்கள் ஒன்றாக வழங்கினர்.
மும்பையில் பிரமாண்டமாக தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த இசை திருவிழா இப்போது மேலும் இரண்டு விதிவிலக்கான இசை நிகழ்ச்சிகளுக்காக டெல்லி மற்றும் சென்னைக்கு பயணிக்க உள்ளது. இதில் இந்திய பாரம்பரிய இசையின் மிகச்சிறந்த பிரபலங்கள் சிலவற்றை உள்ளடக்கிய குறிப்பிடத்தக்க வரிசைகள் இடம்பெறும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் மேஸ்ட்ரோக்கள் மற்றும் அவர்களது மாணவர்களின் தேர்ச்சி மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
விழா பின்வரும் நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்:
ஜனவரி 19, 2025, மாலை 6:00 மணி
பாரத் மண்டப மாநாட்டு கூடம், ப்ளீனரி ஹால், புது தில்லி
தெய்வத்தை நினைவு கூர்கிறேன்
கௌஷிகி சக்ரவர்த்தியால் தயாரிக்கப்பட்டு, தொகுத்து வழங்கப்படும் இந்த இசை நிகழ்ச்சி இசையமைப்பாளர், ஏற்பாட்டாளர் மற்றும் நடத்துனர் ஷோம் சட்டர்ஜி உள்ளிட்ட புகழ்பெற்ற கலைஞர்களின் குழுவைக் கொண்டிருக்கும். முராத் அலி (சாரங்கி), ஓஜஸ் அதியா (தபேலா), நினாத் முலோகர் (புல்லாங்குழல்), ஜோதிர்மாய் ஆகியோரை உள்ளடக்கிய குழு இதுவாகும்.
ஜனவரி 24, 2025, மாலை 6:30 மணி
மெட்ராஸ் மியூசிக் அகாடமி, சென்னை....
துருபத் முதல் தும்ரி வரை: ஒரு இசை ஆய்வு: இந்த நிகழ்ச்சியில் அஜய் சக்ரபர்த்தி (குரல்) பிரஜேஷ்வர் முகர்ஜி (குரல்) மற்றும் ஆயிஷா முகர்ஜி (குரல்), யோகேஷ் ஷாம்சி (தபேலா), அஜய் ஜோக்லேகர் (ஹார்மோனியம்) மற்றும் அமான் ஹுசைன் (சாரங்கி) ஆகியோரால் இசை நிகழ்ச்சி நடத்தப்படும்.
"அந்தந்த துறைகளில் சாதனை நிகழ்த்தக்கூடியவர்களை ஆதரித்து, சிட்டி மற்றும் என்சிபிஏ இந்திய பாரம்பரியத்தை நிலைநிறுத்த உறுதிபூண்டுள்ளன. ஒன்றாக, மும்பை, டெல்லி மற்றும் சென்னை ஆகிய மூன்று நகரங்களில் நான்கு நிகழ்வுகளுடன் சிட்டி என்சிபிஏ ஆடி ஆனந்த் விழா'வின் 14வது பதிப்பை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம். இந்தத் திருவிழாவின் இந்தப் பதிப்பானது, வெவ்வேறு வயதினரைச் சேர்ந்த மூன்று தலைமுறை கலைஞர்களை உள்ளடக்கிய விளக்கக்காட்சிகளைக் கொண்டுள்ளது. என்று, இந்திய இசை, தேசிய கலை நிகழ்ச்சிகளுக்கான மையத்தின் நிகழ்ச்சித் தலைவர், டாக்டர் சுவர்ணலதா ராவ் கூறினார்

# சென்னையில் மீண்டும் ரூ.59'000ஐ கடந்த தங்கம் விலை.. ஒரு கிராம் ரூ.7'340க்கும் விற்பனை!! : நகை வாங்குவோர் அதிர்ச்சி!!

சென்னை, டிச.16–
டைட்டன் நிறுவனத்தின் IRதங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில் இன்று ஒரு பவுனுக்கு ரூ.400 அதிகரித்துள்ளது. இதனால், தங்கம் விலை மீண்டும் ஒரு பவுன் ரூ.59,000 என்ற நிலையை கடந்துள்ளது. இதனால் நகை பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது அதிகபட்சமாக ஒரு பவுன் ரூ.59 ஆயிரத்துக்கு விற்பனையானது. பின்னர், தங்கம் விலை குறையத் தொடங்கியது. கடந்த டிச. 25ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.56,800க்கு விற்பனையானது. பண்டிகைகாலம், டாலர் மதிப்பு உயர்வு, அமெரிக்க அதிபர் பதவியேற்பு நெருங்குவது போன்ற காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.



கடந்த வாரம் பவுனுக்கு ரூ.800 வரை உயர்ந்தது. இதனை தொடர்ந்து வார தொடக்க நாளான திங்கட்கிழமை பவுனுக்கு ரூ.200 உயர்ந்து ஒரு பவுன் ரூ.58,720க்கும், நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.80 குறைந்து ஒரு பவுன் ரூ.58,640க்கும் விற்பனையானது. இந்த நிலையில் நேற்று தங்கம் விலை பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு சவரன் ரூ.58,720க்கும் கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.7,340க்கும் விற்பனையாகிறது. இதைத் தொடர்ந்து இன்று தங்கம் விலை சவரன் ரூ.400 உயர்ந்து ரூ.59,120க்கு விற்பனையாகிறது. ஒரு கிராம் ரூ.50 உயர்ந்து ரூ. 7390க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடைசியாக கடந்த அக்டோபரில் தங்கம் விலை பவுன் ரூ.59,640க்கு விற்பனையானதே உச்சமாக இருந்த நிலையில் மீண்டும் அதையே நோக்கி தங்கம் விலை பயணிப்பதால் நகை பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதே போல சென்னையில் சில்லறை வர்த்தகத்தில் ஒரு கிராம் வெள்ளி விலை ரூ.2 உயர்ந்து ரூ.103க்கு விற்பனை ஆகிறது.

# டெல்லி சட்டப்பேரவை தேர்தல்.. பிரதமர் மோடி' அமித்ஷா உள்ளிட்ட 40 பேர் கொண்ட நட்சத்திரப் பிரச்சாரகர்கள் பட்டியலை பாஜக வெளியிட்டது!!

டெல்லி: ஜன16–
டெல்லி சட்டப்பேரவை தேர்தல். பிரதமர் மோடி, அமித்ஷா உள்ளிட்ட 40 பேர் கொண்ட நட்சத்திர பிரச்சாரகர்கள் பட்டியலை பாஜக வெளியிட்டது!!



டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் பாஜகவின் நட்சத்திர பிரச்சாரகர்கள் பட்டியலில் பிரதமர் மோடி, அமித்ஷா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மொத்தம் 70 உறுப்பினர்களை கொண்ட டெல்லி சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக பிப்ரவரி 5ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் ஆம் ஆத்மி, பாஜக, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது. இந்த நிலையில், தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்கும் 40 நட்சத்திர பிரச்சாரகர்கள் பட்டியலை பாரதிய ஜனதா கட்சி வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்ட அக்கட்சியின் ஏழு முதலமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். மேலும் பட்டியலில் போஜ்புரி நட்சத்திரங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோஜ் திவாரி, ரவிகிஷண் உள்ளிட்ட பூர்வாஞ்சல் தலைவர்கள், தினேஷ் லால் யாதவ் நிராஹுவா உள்ளனர்.
தொடர்ந்து நட்சத்திர பிரச்சாரகர்களாக மத்திய அமைச்சர்கள் நிதின் கட்கரி, சிவராஜ் சிங் சௌகான், மனோகர் லால் கட்டார், பியூஷ் கோயல், தர்மேந்திர பிரதான், ஹர்தீப் சிங் புரி, கிரிராஜ் சிங் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இந்தப் பட்டியலில் டெல்லியில் உள்ள பாஜகவின் ஏழு எம்.பி.க்களும் இடம் பெற்றுள்ளனர். டெல்லி பாஜக பொறுப்பாளர் பைஜயந்த் பாண்டா, இணைப் பொறுப்பாளர் அல்கா குர்ஜார், கட்சியின் மாநிலத் தலைவர் வீரேந்திர சச்தேவா ஆகியோரும் நட்சத்திரப் பிரச்சாரகர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதேபோல், முதலமைச்சர்கள் வரிசையில் தேவேந்திர ஃபட்னவீஸ், ஹிமந்தா பிஸ்வா சர்மா, புஷ்கர் சிங் தாமி, யோகி ஆதித்யநாத், பஜன் லால் சர்மா, நாயப் சிங் சைனி, மோகன் யாதவ் ஆகியோர் நட்சத்திர பிரச்சாரகர்களாக பாஜக வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யவுள்ளனர்.

# அதிமுக முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்தின் ரூ.100.92 கோடி அசையா சொத்துகள் முடக்கம்: அமலாக்கத்துறை நடவடிக்கை

சென்னை, டிச.16–
அதிமுக முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்தின் ரூ.100.92 கோடி மதிப்புள்ள அசையா சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கம் செய்தது. 2002ல் வைத்திலிங்கத்தின் மீது தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக அசையா சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியது. அதிமுக ஆட்சியில் வீட்டுவசதி மற்றும் நகரப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சராக வைத்திலிங்கம் செயல்பட்டார். வைத்திலிங்கம் தற்போது ஓ.பன்னீர் செல்வம் அணியில் இருந்து வருகிறார். கடந்த 2011 முதல் 2016 ம் ஆண்டு வரை அமைச்சராக இருந்த போது, குடியிருப்புகள் கட்ட தனியார் நிறுவனத்திற்கு



அனுமதி வழங்க ரூ.27.90 கோடி லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது.
மேலும் தனது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகவும் புகார் எழுந்தது. இது தொடர்பாக தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கிடையே சட்டப்பிரோதபணப்பரிமாற்றம் தொடர்பான விகாரத்தில் அமலாக்கத்துறை உள்ளே வந்தது. வைத்திலிங்கம் மீது அமலாக்கத்துறை தனியே வழக்குப்பதிவு செய்தது. கடந்த 2004ம் ஆண்டு அக்டோபர் மாதம் வைத்திலிங்கத்தின் வீடு அலுவலகங்களில் அமலாக்கத்துறை தீவிரவாக சோதனை மேற்கொண்டது.
மொத்தம் 10 இடங்களில் சோதனை நடந்தது. இந்த சோதனையின் போது சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில், பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் வைத்திலிங்கத்துக்கு சொந்தமான ரூ.100.92 கோடி மதிப்புள்ள அசையா சொத்துகளை அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டுள்ளது. இதனை அமலாக்கத்துறை தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் வலைதளத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி: 14 காளைகள் அடக்கி சிறந்த மாடுபிடி வீரராக முதல் பரிசு வென்றார் நத்தம் பார்த்திபன்!..


மதுரை : ஜன16–
உலக புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் 14 காளைகள் அடக்கி சிறந்த மாடுபிடி வீரராக நத்தம் பார்த்திபன் முதல் பரிசு வென்றார். பாலமேடு ஜல்லிகட்டு போட்டியில் மொத்தம் 10 சுற்றுகள் நடைபெற்றது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் பாரம்பரியமிக்க பாலமேடு வாடிவாசல் வழியாக 930 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. 450 வீரர்கள் பங்கேற்றனர். அந்த காளைகளை அடக்குவதற்காக காளையர்கள் மல்லுக்கட்டினர்.
நாளை அனைவரும் எதிர்ப்படும் அலங்காநல்லூரில் நடைபெற உள்ள ஏறுதழுவதல் விழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவந்தி வைக்கிறார். தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழர்களின் வீரத்தை பறைசாற்றும் ஜல்லிக்கட்டு திருவிழா மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் நேற்று நடைபெற்றது. மாட்டுப்பொங்கலையொட்டி பாலமேட்டில் உள்ள மஞ்சமலை ஆற்று திடலில் இன்று காலை ஜல்லிக்கட்டு தொடங்கியது.
இதில் பங்கேற்க ஆன்லைன் மூலம் 1,100 காளைகள், 910 வீரர்கள் முன்பதிவு செய்திருந்தனர். முன்னதாக காளைகளுக்கும், வீரர்களுக்கும் மருத்துவ பரிசோதனை நடந்தது. பின்னர், கிராமத்தில் உள்ள பாதாள விநாயகர் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. பின்னர் பாரம்பரிய முறைப்படி வெற்றி பெற்ற வீரர்களுக்கும்,



காளைகளுக்கும் வழங்கும் வேட்டி, துண்டு உள்ளிட்ட பரிசுப் பொருள்களை தலைச்சுமையாக, வாண வேடிக்கையுடன், மேளதாளம் முழங்க ஊர்வலமாக எடுத்து வந்தனர்.
இதை தொடர்ந்து வாடிவாசல் முன்பாக அமைச்சர் பி.மூர்த்தி, கலெக்டர் சங்கீதா சோழவந்தான் எம்.எல்.ஏ வெங்கடேசன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அரவிந்த், கோட்டாட்சியர் ஆகியோர் முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். காலை 7.40 மணி அளவில் ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். முதலாவதாக வாடிவாசலில் இருந்து கோயில் காளை அவிழ்த்து விடப்பட்டது.
பின்னர் ஒவ்வொன்றாக காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்த காளைகளை வீரர்கள் தீரத்துடன் அடக்கினர். தொட்டால் சீறுவேன் என சில காளைகள் களத்தில் நின்று ஆட்டம் காண்பித்தன. சுற்றுக்கு 100 காளைகள், 50 வீரர்கள் வீதம் களம் இறக்கப்பட்டனர். 8 சுற்றுகளில் சிறந்த மாடுபிடி வீரர்களாக தேர்வான 32 பேர் இறுதிச்சுற்றில் களமிறங்கினர்.
*சிறந்த வீரர் பார்த்திபன்
மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் 14 காளைகளை அடக்கி நத்தம் பார்த்திபன் முதலிடம் பிடித்தார். மஞ்சம்பட்டி துளசிராம் 12 காளைகளை பிடித்து 2ஆம் இடம் பிடித்தார். பொதும்பு பிரபாகரன் 11 காளைகளை அடக்கி 3வது இடம் பிடித்துள்ளார்.
ஜல்லிக்கட்டு போட்டியில் மாடுபிடி வீரர்கள் 19 பேர், மாட்டின் உரிமையாளர்கள் 10 பேர், பார்வையாளர்கள் 9 பேர் உள்பட 38 பேர் காயமடைந்தனர். காயமடைந்த 38 பேரில் 4 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
*சிறந்த காளை, வீரருக்கு பரிசு
பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடுபிடி வீரரான நத்தம் பார்த்திபன் 14 காளைகள் அடக்கி முதல் பரிசான காரை வென்றார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பாக இந்த கார் பரிசாக வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசு மஞ்சம்பட்டி துளசிராம் 12 காளைகள் அடக்கி மோட்டார் பைக் பரிசு பெற்றார். மூன்றாம் பரிசு பொதும்பு பிரபாகரன் 11 காளைகள் எலக்ட்ரிக் பைக் பரிசு பெற்றார்.
பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த காளைக்கான முதல் பரிசு சத்திரப்பட்டி விஜய தங்கப்பாண்டிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பாக டிராக்டர் பரிசாகவும், இரண்டாம் பரிசு சின்னப்பட்டி கார்த்திக்கு கன்றுடன் கறவை மாடு பரிசாகவும், மூன்றாம் பரிசு குருவித்துறை பவித்ரன் என்பவருக்கு விவசாய ரோட்டேட்டர் கருவி பரிசாகவும் வழங்கப்பட்டது.
பரிசுப்பொருட்களை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி நாடாளுமன்ற உறுப்பினர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட வருவாய் அலுவலர் உட்பட பலர் உடன் இருந்தனர்.
இது தவிர வெற்றி பெற்ற வீரர்களுக்கு டிவி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின், மிக்ஸி கிரைண்டர், கட்டில் மெத்தை, சைக்கிள், தங்கம், வெள்ளிக்காசுகள், அண்டா, பித்தளை, சில்வர் பாத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்கப்பட்டது.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் கூம்பு வடிவ ஒலிபெருக்கிகளுக்கு தடை: காவல்துறை அதிகாரிகள் உறுதி செய்ய கலெக்டர் உத்தரவு

நாகர்கோவில்: ஜன16–
கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவழிபாட்டுத்தலங்கள், ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பொது நிகழ்ச்சிகள் மற்றும் கோயில் திருவிழாக்களில் கூம்பு வடிவ ஒலி பெருக்கிகள் மற்றும் அதி சக்தி வாய்ந்த ஒலி பெருக்கிகள் பயன்படுத்துவதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக தொடர் புகார்கள் வந்தன. இதை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அழகுமீனா தலைமையில் கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் வைத்து கூட்டம் நடைபெற்றது.
கூட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வட்டார போக்குவரத்து அலுவலர், காவல் துறையை சார்ந்தவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வழிகாட்டு நடைமுறைகள் கலெக்டரால் வழங்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு:
*வாகனங்கள் ஏர் ஹார்ன் அல்லது மல்டிடோன் ஹாரனைப் பொருத்தவோ பயன்படுத்தவோ கூடாது. இதனை வட்டார போக்குவரத்து அலுவலர் உறுதி செய்ய வேண்டும். தேவையற்ற சத்தத்தை உருவாக்கும் அல்லது இயக்கத்தில் இருக்கும் போது ஆபத்தான ஒலி ஏற்படுத்தும் வாகனங்கள் தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலர் அவ்வப்போது திடீர் ஆய்வுகளை மேற்கொள்ள



வேண்டும்.
*வட்டார போக்குவரத்து அலுவலர், சத்தம் மற்றும் ஒலி மாசுபாடு (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 2000ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இரைச்சல் அளவு சுற்றுப்புற காற்றின் தரத்தை மீறாமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். மீறினால் வாகனங்களின் உரிமையாளர்கள் மீது தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
*வட்டார போக்குவரத்து அலுவலர், சாலையில், குறிப்பாக அமைதி மண்டலத்தில் "அமைதி மண்டலம் ஹார்ன் இல்லை" என்பதைக் குறிக்கும் பலகைகளை அமைக்க வேண்டும்.
*ஒலிபெருக்கி அல்லது வேறு எந்த ஒலி மூலமும் பயன்படுத்தப்படும் பொது இடத்தின் எல்லையில் இரைச்சல் அளவு அப்பகுதிக்கான சுற்றுப்புற இரைச்சல் தரத்தை விட 10 பீஙி(கி) ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது என்பதை காவல்துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். அல்லது 75 பீஙி(கி) எது குறைவாக இருந்தாலும். தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி அமைதிப்பகுதி/மண்டலத்தில் ஒலிபெருக்கிகள் அல்லது பிற ஒலி உருவாக்கும் கருவிகளைப் பயன்படுத்தும் நபர் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
*தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி சத்தம் தொல்லை தொடர்பாக பொதுமக்கள் அளிக்கும் புகார்களுக்கு காவல்துறை தீர்வு காண வேண்டும். ஒலி உமிழும் கட்டுமானக் கருவிகளை இரவு நேரத்தில் குடியிருப்புப் பகுதிகளிலும் அமைதிப் பகுதியிலும் பயன்படுத்தவோ அல்லது இயக்கவோ கூடாது என்பதை உள்ளாட்சி அமைப்பு உறுதி செய்ய வேண்டும்.
*ஒலிபெருக்கி அமைப்பைப் பயன்படுத்துபவர்கள் காவல்துறையிடம் எழுத்துப்பூர்வமாக முன் அனுமதி பெற வேண்டும். பொதுமக்கள் சமர்ப்பிக்கும் விவரங்களில் பேச்சாளர்களின் வகை, ஸ்பீக்கர்களின் எண்ணிக்கை, பயன்படுத்தும் காலம் போன்றவை இருக்க வேண்டும், வழங்கப்பட்ட ஆவணங்களுக்கு எதிராக ஏதேனும் மீறல் காணப்பட்டால், தற்போதுள்ள சட்டத்தின்படி தனிநபர் / அமைப்பு மீது காவல்துறை தேவையான கடுமையான நடவடிக்கையைத் தொடங்கும்.
* இரவு நேரத்திலும், அமைதியான பகுதிகளிலும், பொதுமக்கள் ஒலிபெருக்கி அல்லது ஒலி உருவாக்கும் கருவி அல்லது இசைக்கருவி அல்லது ஒலி பெருக்கி ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்பதை காவல்துறை உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (ஜிழிறிசிஙி) தொழிற்சாலைகளின் செயல்பாடுகளில் இருந்து உருவாகும் இரைச்சல், ஒலி மாசுபாடு (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுப்புற காற்றின் தரத் தரத்தை மீறாமல் இருப்பதை உறுதி செய்யும். இவ்வாறு கலெக்டரால் தெரிவிக்கப்பட்டது.
*அனுமதி பெறவேண்டும்
டெசிபல் ஆப் செயலியை பதிவிறக்கம் செய்து, ஒலி மாசு தர அளவை கணக்கிட்டு அதன் மூலம் பொதுமக்கள் ஒலி மாசு அதிகம் உள்ள இடங்களை குறிப்பிட்டு காவல் துறையிடம் புகார் அளிக்கலாம் என காவல் கண்காணிப்பாளர் கூட்டத்தில் தெரிவித்தார். கூட்டத்தில், பொது வழிபாட்டுத் தலங்கள், ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பொது நிகழ்ச்சிகள் மற்றும் கோயில் திருவிழாக்களில் ஒலி பெருக்கிகளை பயன்படுத்தும் முன்னர் காவல் துறை அதிகாரியிடம் எவ்வளவு நாட்கள் மற்றும் எவ்வளது தூரம் ஒலி பெருக்கிகள் அமைக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டு முன் அனுமதி பெற்ற பின்னரே ஒலி பெருக்கிகள் அமைக்க வேண்டும். மீறும் பட்சத்தில் ஒலி பெருக்கிகள் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்படும் என கலெக்டரால் தெரிவிக்கப்பட்டது.

விளம்பர தொடர்புக்கு
8667764792 , 9841155073
9791079909


# அக்கச்சிப்பட்டியில் உள்ள கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பொங்கல் விழா

தேனி, ஜன,16

முல்லைப் பெரியாறு அணையை 152 அடியாக உயர்த்த முதலமைச்சர் மு.க ஸ்டாலின் நிச்சயம் நடவடிக்கைஎடுப்பார் என ஜான் பென்னிகுயிக்கின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்

ஐந்து மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கக்கூடிய முல்லைப் பெரியாறு அணையை கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயின் 184 ஆவது பிறந்தநாள் இன்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

கர்னல்ஜான்பென்னிகுயிக்கின் பிறந்த நாளை முன்னிட்டு தேனி மாவட்ட மக்கள் அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக பொங்கல் வைத்து கொண்டாடி வருவது வழக்கம்



இந்நிலையில் இன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் உள்ள கர்னல் ஜான் பென்னிகுய்க்கின் மணிமண்டபத்தில் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் பொங்கல் வைத்து ஜான் பென்னிகுயிக்கை வழிபட்டு அவரின் திருவுருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர் தேனி மாவட்ட நிர்வாகம் சார்பில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி, தேனி மாவட்ட ஆட்சியர் சஜீவனா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பென்னிகுயிக்கின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து பெண்கள் ஒன்றிணைந்து சமத்துவ பொங்கல் இட்டு அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு கலை நிகழ்ச்சிகளை அமைச்சர் கண்டு கழித்தார். இந்த நிகழ்ச்சிகளை காண்பதற்காக ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் லோயர் கேம்பில் வருகை புரிந்து தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சியை கண்டு ரசித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ஐ.பெரியசாமி கர்னல்ஜான்பென்னிகுயிக்கின் பிறந்தநாள் தேனி மாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சியான நாள், ஐந்து மாவட்டம் செழிப்பாகஇருக்ககாரணமாக விளங்கியவர்

முல்லைப் பெரியாறு அணையை 152 அடியாக உயர்த்துவதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் நடவடிக்கை எடுப்பார், பேபி அணை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பார் என தெரிவித்தார்

# தமிழர் திருநாள் கொண்டாட்டம்

குமரி ஜன.16–

குமரி மாவட்டம் கோட்டார் நாயுடு ஆஸ்பத்திரி அருகில் உள்ள லாலா புது தெருவில் லாலா புது தெரு குடியிருப்போர் நல சங்கம் மற்றும் LNS boys இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் நடைப் பெற்றது. இந்நிகழ்ச்சியினை

தலைமையேற்று 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எம்.ரிஸ்வானா ஹிதாயத் அவர்களும், சிறப்பு விருந்தினராக கலப்பை மக்கள் இயக்க தலைவரும் கல்வி நன்கொடையாளயர் என போற்றப்படும் திரு.பி.டி செல்வகுமார் அவர்களும், நாகர்கோவில் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் திருமதி. அகஸ்டினா கோகிலவாணி அவர்களும், நாகர்கோவில் சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் திரு.ஹிதாயத் அவர்களும், கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.




திரு.பி.டி.செல்வகுமார் எவ்வித மத சாயமும் பூசிக் கொள்ளாத தமிழர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை மிகவும் சிறப்பு வாய்ந்தது. சமத்துவ பொங்கல் நிகழ்ச்சி எங்கு நடைபெற்றாலும் அதற்கான அழைப்பிதழ் வந்தால் நிச்சயமாக எனது அனைத்து பணிகளுக்கும் மத்தியில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நான் செல்வது வழக்கம். தமிழர் பண்பாடும் பாரம்பரியமும் போற்றப்பட வேண்டும் என்று சிறப்புரை வழங்கினார்கள்.

சங்க தலைவர் திரு.டி.எஸ். ராஜன் மற்றும் செயலாளர் திரு.ராமு பொருளாளர் திரு ரமேஷ் சட்ட ஆலோசகர் திரு.தயாளன் ஆகியோர் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மூன்று நாட்கள் நடைபெறும் பொங்கல் விழாவில் கோலப்போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன

# கலப்பை மக்கள் இயக்கத்தின் 11-வது ஆண்டு சமத்துவ பொங்கல் விழா விஜய்வசந்த் எம்.பி’ நடிகை காயத்திரி ராகுராம் பங்கேற்பு

அஞ்சுகிராமம் ஜன 16:

கன்னியாகுமரியை அடுத்த அஞ்சுகிராமம் பேரூராட்சிரஸ்தாகாடு நீண்ட கடற்கரையில், திரைப்பட தயாரிப்பாளரும், கலப்பை மக்கள் இயக்கநிறுவனருமான பி.டி. செல்வகுமார் தலைமையிலான கலப்பை மக்கள் இயக்கத்தின் சார்பில் 11வது ஆண்டு சமுத்துவ பொங்கல் விழா நடந்தது. கின்னஸ் சாதனையில் இடம்பெறும் வகையில் 2,008 பானைகளில் சமத்துவ பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கலப்பை மக்கள் இயக்கத்தின் தலைவர் பி.டி.செல்வகுமார் தலைமை தாங்கினார். குமரி மக்களவை காங்கிரஸ் உறுப்பினர் விஜய்வசந்த், ரஸ்தாகாடு கடல் மணல் பரப்பில் நீண்ட விரிசையில் காத்திருந்த பெண்களுடன் பொங்கல் பானைகளில் முதல் பொங்கல் பானை அடுப்பில்.

தீ யை பற்றவைத்து பொங்கல் விழாவை தொடங்கி வைத்தார். பூஜித குரு பாலபிரஜாதிபதி அடிகளார், காணிமடம் தபஸ்வி பொன். காமராஜ், வள்ளலார் பேரவை தலைவர் பத்மனேந்திர சுவாமிகள்





வாழ்த்துரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினராக அதிமுக மாநில கொள்கைபரப்பு துணை செயலாளரும், திரைப்பட நடிகையுமான காயத்ரி ரகுராம் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

விழாவில் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலைநிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் விஜய்வசந்த் எம்பி.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகர மாவட்ட தலைவர் நவீன்குமார், மாநில செயலாளர் சினிவாசன், அகஸ்தீஸ்வரம் வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் தங்கம் நடேசன், வர்த்தக காங்கிரஸ் மாவட்ட தலைவர் சிவக்குமார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் அரோக்கியராஜன், தொழிலதிபர் ஜாண்சன், கலப்பை மக்கள் இயக்க மாவட்ட தலைவர் வக்கீல் பாலகிருஷ்ணன், தொழிலதிபர் மரியோ ஜோசப் கெண்ணடி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொங்கல் இட்ட மங்கையர்கள் பொங்கலிட 2,008 சில்வர் பானைகளை விஜய் வசந்த் எம்பி சொந்த செலவில் வாங்கி கொடுத்ததை. பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற அனைவரும் பாராட்டினார்கள்.

பழம் பெரும் தமிழ் கலைகளான தாரை, தப்பட்டை, பறை, சிலம்பாட்டம், கரகாட்டம், வில்லுபாட்டு கலைந்கழ்ச்சிகள், பொங்கல் விழாவில் கலைஞர்கள் நிகழ்த்தியதுடன், பரதநாட்டியமும் நிகழ்வில் நடைபெற்றது. விழாவையொட்டி சினிமா டைரக்டர் பி.டி செல்வக்குமார் ரஸ்தாக்காடு கடற்கரையிலுள்ள செடி, கொடிகள், மணல் திட்டுக்ளை தனது சொந்த பணத்தில் சரி செய்தார், விழாவில் ஆம்புலன்ஸ், மின்சார வசதி, குடிதண்ணீர், உணவு, கழிப்பிட வசதிகளுடன், தீயனைப்பு துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், கலப்பை மக்கள் இயக்க தொண்டர்கள் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தது பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது

# ஆளுநர் ஆர்.என். ரவி ஆன்மீகத்தை வைத்து அரசியல் செய்ய பார்க்கிறார்: ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை: ஜன 16–

ஆளுநர் ஆர்.என்.ரவி ஆன்மீகத்தை வைத்து அரசியல் செய்ய பார்க்கிறார் என ஆர்.எஸ்.பாரதி பேட்டி அளித்துள்ளார். வண்ணாரப்பேட்டை கல்மண்டபம் சந்திப்பு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவி 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடுவதமாக திமுக வர்த்தக அணி சார்பில் சென்னை வண்ணாரப்பேட்டையில் திருவள்ளுவர் சிலை அமைத்து




பொதுமக்களுக்கு திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திமுக வர்த்தக அணி சார்பில் மாநிலத் துணைச்செயலாளர் பாண்டி செல்வம் தலைமையில் வண்ணாரப்பேட்டை கல்மண்டபம் சந்திப்பு அருகில் திருவள்ளுவர் சிலை அமைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனை அடுத்து திருக்குறள் புத்தகங்களை பொதுமக்களுக்கு வழங்கி தொடங்கிவைத்தனர். பின்னர், செய்தியாளர்களிடம பேசிய ஆர்.எஸ்.பாரதி கூறியதாவது; ஆளுநர் ஆர்.என். ரவி ஆன்மீகத்தை வைத்து அரசியல் செய்ய பார்க்கிறார். அவர் தமிழகத்தில் வியாபாரம் செய்ய வந்துள்ளார், வியாபாரம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். ஆன்மீகத்தை வைத்து எத்தனை தடை கற்கள் போட்டாலும் படிக்கற்களாக மாற்றி திமுக வெற்றி பெறும்” என்று தெரிவித்தார்.



தை திருநாள் பொங்கலை முன்னிட்டு தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆசி பெற்றார் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் அவர்கள்



தை திருநாள் பொங்கலை முன்னிட்டு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆசி பெற்றார் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம் அவர்கள்



தை திருநாள் பொங்கலை முன்னிட்டு தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆசி பெற்றார் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார் அவர்கள்



தை திருநாள் பொங்கலை முன்னிட்டு தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆசி பெற்றார் கழக மாநில மாணவரணி செயலாளர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் அவர்கள்



ஈரோடு கிழக்கு சட்டமன்ற வேட்பாளர் பிரச்சாரக் கூட்டம் புதன்கிழமை மாலை வீரப்பன் சத்திரம் பகுதியில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் திரு.சு முத்துசாமி, வேட்பாளர் சந்திரகுமார் அவர்களுடன் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் மக்களவை மேலவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சத்திரம் பகுதி செயலாளர் வி சி நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் ஈரோடு மாநகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் குளம் எம் ராஜேந்திரன் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்..



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு. க .ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பிரச்சாரத்தினை ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளர் திரு வி .சி. சந்திரகுமார் அவர்களை ஆதரித்து இன்று பெரியார் நகர் பகுதியில் கள்ளுக்கடை மேடு, ஓடைப்பள்ளம் ,ஆகிய பகுதியில் வாக்கு சேகரித்தார் .உடன் இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள், மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளரும் ராஜ்யசபா உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ் அவர்கள், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், ஈரோடு மாநகர செயலாளர் மு. சுப்பிரமணியம் அவர்கள், பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி D. சந்திரசேகர் அவர்கள் மண்டல குழு தலைவர் அவர்கள், கழக மாநில ,மாவட்ட, மாநகர ,பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் ,கழக சார்பு அணியினர் தீவிர பிரச்சாரத்தில் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பிரச்சாரத்தினை ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளர் திருவி .சி. சந்திரகுமார் அவர்களை ஆதரித்து பெரியார் நகர் பகுதியில் கள்ளுக்கடை மேடு, ஓடைப்பள்ளம் ,ஆகிய பகுதியில் வாக்கு சேகரித்தார் .உடன் இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள், மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளரும் ராஜ்யசபா உறுப்பினருமான திரு. அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. இ. பிரகாஷ், ஈரோடு மாநகர செயலாளர் மு. சுப்பிரமணியம், பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி டி. சந்திரசேகர், மண்டல குழு தலைவர் ,கழக மாநில ,மாவட்ட, மாநகர ,பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் ,கழக சார்பு அணியினர் தீவிர பிரச்சாரத்தில் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.




தை பொங்கல் திருநாளை யொட்டி திருவள்ளுவர் நாளன இன்று தர்மபுரி நகரம் அன்னசாகரம் 32வது வார்டில் பொங்கல் வைத்து கொடியேற்றி இனிப்பு வழங்கி அனைவருக்கும் வாழ்த்து தெரிவிக்கிறார் தர்மபுரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தடங்கம் சுப்ரமணி. உடன் நிர்வாகிகள் ,திருமதி ரேணுகாதேவி, நாட்டான்மாது, முல்லைவேந்தன், அன்பழகன், அசோக்குமார், கனகராஜ், வெல்டிங்ராஜா, காசிநாதன், மகேந்திரன், சுருளி ராஜன், ராஜேந்திரன், உள்ளிட்ட ஏராளமான கழகத்தினரும் சார்பு அமைப்பினரும் திரளாக கலந்துகொண்டனர்.




வேலூர் மாநகர் காட்பாடி 1வது மண்டலம் 6வது வட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக கொடியேற்று விழா நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கொடியேற்றி கல்வெட்டை திறந்து வைத்து இனிப்பு வழங்கினார் 6வது வட்ட செயலாளர் சம்மந்தம் மாமன்ற உறுப்பினர் சீனிவாசன் மற்றும் திமுகவினர் பலர் கலந்து கொண்டனர் முடிவில் அன்னதானம் வழங்கப்பட்டது



தை திருநாள் பொங்கலை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க. சுந்தர் அவர்களிடம் காஞ்சிபுரம் மாநகராட்சி இரண்டாவது பகுதி கழக செயலாளர் எஸ். சந்துரு 23 வது வட்ட கழக செயலாளர் ஆர். முரளி ஆகியோர் வாழ்த்து பெற்றனர்

“மாலையுகம்“ நடுநிலை நாளிதழ் *தமிழ்நாடு மற்றும் *புதுச்சேரி மாநிலங்களில் அனைத்து மாவட்ட வாசகர்களையும் சென்றடைகிறது.

# ஜகத்குரு சாயி மா லக்ஷ்மி தேவி வெளிநாட்டு சீடர்களுடன் பிரயாக்ராஜ் மஹா கும்பத்தில் புனித நீராடுகிறார்கள்



சென்னை,16ஜனவரி 2025: ஜகத்குரு சாயி மா லக்ஷ்மி தேவி, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான வெளிநாட்டு சீடர்களுடன் சேர்ந்து பிரயாக்ராஜ் மகா கும்பத்தில் அம்ரித்ஸ்னான்/ ஷாஹிஸ்னான் எடுத்தார். 2007 ஆம் ஆண்டு பிரயாக் அர்த்த கும்பமேளாவில், வைஷ்ணவ சாதுசமாஜத்தால் பக்திமாயி மீரா பாய் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் மற்றும் மதிப்பிற்குரிய ஸ்ரீ சாதுவா பாபா மஹாராஜ் அவர்களால் ஆதரிக்கப்பட்டார். ஜகத்குரு சாயி மா லக்ஷ்மி தேவி 2,700 ஆண்டுகால விஷ்ணுசுவாமி பரம்பரை மற்றும் கும்பமேளா வரலாற்றில் இந்தமதிப்புமிக்கபட்டத்தைப் பெற்ற முதல் பெண் துறவி ஆவார்.

கும்ப நகரியின் பிரிவு 17 இல் உள்ள தனது சக்தி தாம் ஆசிரம முகாமில் இருந்து, ஜகத்குரு சாய் மா, தனது 9 வெளிநாட்டு வம்சாவளி மகாமண்டலேஷ்வர்கள் மற்றும் இந்து மதத்தில் நம்பிக்கை கொண்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சீடர்களுடன் பாரம்பரிய ஆரவாரத்துடன் பிரமாண்டமான நிகழ்வில் பங்கேற்றார்.

இந்நிகழ்வில், ஜகத்குரு சாய் மா கூறுகையில், "நம்பமுடியாத, மறக்க முடியாத, தெய்வீக, பிரமாண்டமான மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட மகா கும்பமேளா மத மற்றும் கலாச்சார கண்ணோட்டத்தில் ஒருமுக்கியமான நிகழ்வாகும். இது உணர்ச்சிகள் மற்றும் நம்பிக்கையின் கண்காட்சியாகும். மகா கும்பமேளாவின் முதல் அமிர்தஸ்நானத்தின் போது அனைத்தும் ஒன்றாக இணைகின்றன."

ஜகத்குரு சாய் மா, கி.பி 1477 இல் சுவாமி பாலானந்தாச்சாரியாரால் நிறுவப்பட்ட அகில பாரதிய ஸ்ரீ பஞ்ச நிர்மோஹி அனி அகாராவுடன் தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. மொரீஷியஸில் ஒரு இந்து பிராமண குடும்பத்தில் பிறந்த சாய் மா, சனாதன தர்மத்தின் நித்திய அறிவைப் பரப்புவதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். உலகளவில், தெய்வீக அன்பு மற்றும் சேவையின் அடையாளமாக இந்தியாவின் வாரணாசியில் (காசி) சக்தி தாம் ஆசிரமத்தை நிறுவினார், இது உலகம் முழுவதிலுமிருந்து மாணவர்களை ஈர்த்துள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், மற்றும் பல நாடுகளில் ஆன்மீக மையங்களை உருவாக்கசாய்மா உத்வேகம் அளித்துள்ளார். கனடா, ஐரோப்பா, இஸ்ரேல் மற்றும் தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில், தனது மாற்றத்தை ஏற்படுத்தும் போதனைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் மக்களை ஒன்றிணைக்கிறார். கூடுதலாக, சக்திவாய்ந்த யக்ஞங்கள் மற்றும் பண்டைய வேத சடங்குகள் மூலம் தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் தூய்மைப்படுத்தி உயர்த்துவதற்காக அவர் உற்சாகமாக செயல்படுகிறார்.

ஆன்மீகத்தில் முனைவர் பட்டம் பெற்ற, சாய் மா ஒரு ஊக்கமளிக்கும் முக்கிய பேச்சாளர், அவர் தனது ஆழ்ந்த புத்திசாலித்தனம் மற்றும் துடிப்பான இருப்பால் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களை ஈர்க்கிறார்.

ஒரு திறமையான எழுத்தாளராக, சாய் மாவின் படைப்புகள் Conscious Living: The Power of Embracing Your Authentic You என்ற புத்தகம் ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டு ஆறு கண்டங்களில் உள்ள வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

# சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் 'ஃபாரெவர் நியூ இந்தியா' ஷோரூம்




சென்னை :ஜன16– ஃபாரெவர் நியூ இந்தியா, சென்னை மற்றும் தென்னிந்தியாவின் மிகப்பெரிய மாலான எக்ஸ்பிரஸ் அவென்யூமாலில் அதன் புதிய கடையின் பிரமாண்ட திறப்பு விழாவைக் கொண்டாடியது. புகழ்பெற்ற செல்வாக்கு மிக்க ஃபேஷன் ஸ்டைலிஸ்ட் மெஹந்தி ஜஷ்னானி மற்றும் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் பிரியதர்ஷினி விஜய் ஆகியோரால் நடத்தப்பட்ட ஒரு கவர்ச்சிகரமான நிகழ்வு, இந்தியாவில் இந்த பிராண்டின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கொண்டாட கூடியிருந்த மதிப்புமிக்க விருந்தினர்களை ஈர்த்தது.

"சென்னையில் உள்ள மிகவும் பிரீமியம் உயர்தர மால்களில் ஒன்றில் எங்கள் ஆடம்பரமான புதிய கடையைத் திறப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். காலத்தால் அழியாத ஃபேஷன் மற்றும் உலகளாவிய வடிவமைப்புகளை எங்கள் ஃபேஷன் உணர்வுள்ள வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகக்கொண்டுவருவதற்கான எங்கள் பயணத்தில் இது ஒரு அற்புதமான மைல்கல்லைக் குறிக்கிறது. சென்னை எப்போதும் நேர்த்தியையும் உன்னதமான பாணிகளையும் பாராட்டும் ஒரு துடிப்பான நகரமாக இருந்து வருகிறது, மேலும் இங்கே எங்கள் இருப்பை விரிவுபடுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

ஃபாரெவர் நியூஇந்தியாவில் தனது தடத்தை விரிவுபடுத்தும் போது, காலத்தால் அழியாத நேர்த்தியையும் சமகால நுட்பத்தையும் வெளிப்படுத்தும் உயர்தர ஃபேஷனை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை பிராண்ட் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்த புதிய திறப்பு விழா, வாடிக்கையாளர்கள் அதிகாரம் அளிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் ஃபேஷனை ஆராயக்கூடிய அழைக்கும் இடங்களை உருவாக்கும் ஃபாரெவர் நியூவின் தொலைநோக்குப் பார்வைக்கு ஒரு சான்றாகும்

# பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்

திருவள்ளூர்: ஜன16– தைதிருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடும் பொருட்டு, பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு விஜய் டிவி கலக்கப்போவது யாரு சீசன் 10 போட்டியாளரான மோசஸ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீ ராம் பொறியியல் அறக்கட்டளை நிர்வாகம் மற்றும் கல்லூரி நிர்வாகம் இணைந்து சிறப்பாக செய்திருந்தது.

இந்நிகழ்ச்சியானது சிறப்பு விருந்தினரின் குத்துவிளக்கு ஏற்றலுடன் இனிதே துவங்கியது.




மேலும் இவ்விழாவிற்கு ஸ்ரீராம் பொறியியல் பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் மற்றும் வளாக இயக்குனர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஸ்ரீராம் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மெக்கானிக்கல் துறை தலைவர் முனைவர் ஜி. சுகன்யா அவர்கள் சிறப்பு விருந்தினரை வரவேற்று பேசினார். அதனைத் தொடர்ந்து பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மற்றும் வளாக இயக்குனர் ஆகியோர் இணைந்து மோசஸ் அவர்களுக்கு சால்வை அணிவித்தும், நினைவு பரிசு அளித்தும் கௌரவித்தனர்.

விஜய் டிவி கலக்கப்போவது யாரு சீசன் 10 போட்டியாளரான மோசஸ் அவர்கள் கடந்து வந்த பாதையை பற்றி ஒரு சிறிய விளக்கக் காட்சி காண்பிக்கப்பட்டது.

இதனை அடுத்து பேசிய மோசஸ் அவர்கள் தனது வாழ்வில் கடந்து வந்த பாதைகளை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் முழு முதல் காரணம் என்று உரைத்தார். மேலும் மாணவர்களும் தங்களின் வாழ்க்கையில் இதேபோன்று தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், கொண்டு செயல்பட வேண்டும் என்று ஊக்கம் தரும் வகையில் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் மாணவர்கள் மத்தியில் பல குரல் பேசியும், மாணவர்களுடன் நடனமாடியும் இப்பொங்கல் விழாவினை சிறப்பித்தார். இந்த சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டத்தில், பாரம்பரிய போட்டிகளான உறியடித்தல், பொங்கல் வைக்கும் போட்டி, ரங்கோலி, சாக்கு போட்டி, கயிறு இழுத்தல் என பல்வேறு போட்டிகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் பல்வேறு மாணவர்கள் கலந்து கொண்டு, பரிசினை பெற்றனர். இந்நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்த அனுமதி அளித்த ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை நிர்வாகத்திற்கும் கல்வி முதல்வருக்கும், பேராசிரியர், கல்லூரி வளாக இயக்குனர், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் என அனைவருக்கும் நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது.

# 2025ம் ஆண்டுக்கான தைவான் எக்ஸலன்ஸின் IMTEX கண்காட்சி பெங்களூருவில் நடைபெறவுள்ளது

சென்னை, ஜனவரி 2025: தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் இயந்திர கருவிகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பத்திற்கான முதன்மையான கண்காட்சியான மிவிஜிணிஙீ 2025 இல் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்த தைவான் எக்ஸலன்ஸ் தயாராகி வருகிறது. ஜனவரி 23 முதல் 29, 2025 வரை பெங்களூரு சர்வதேச கண்காட்சி மையத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள தைவான் எக்ஸலன்ஸ் நிகழ்வில், 13 முன்னணி தைவானிய நிறுவனங்களின் பங்கேற்புடன் இந்தியாவின் உற்பத்தித் துறையை மாற்றத் தயாராக உள்ள 17 அதிநவீன தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்த நிகழ்வு, புதுமையான தீர்வுகளின் காட்சிப்படுத்தலை விட இந்தியாவின் உற்பத்தித் துறையுடன் வலுவான




கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான தைவான் எக்ஸலன்ஸின் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். அதிநவீன உலோகசெயலாக்கதீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், தைவான் எக்ஸலன்ஸ், இந்திய உற்பத்தியாளர்களுக்கு துல்லியம், செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையில் சிறந்து விளங்க தேவையான கருவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கண்காட்சியின் தொடக்க நாளில் தைவான் எக்ஸலன்ஸின் தயாரிப்பு வெளியீட்டு அமர்வான "கிராஃப்டிங் எக்ஸலன்ஸ் ஃபார் எ புரோகிரஸிவ் டுமாரோ" இடம்பெறும், இது கெமர், கோசர், பல்மாரி, சிண்டெக், மற்றும் ஹைவின் போன்ற சிறந்த தைவானிய பிராண்டுகளின் மேம்பட்ட உலோக செயலாக்க தொழில்நுட்பங்களை வெளிப்படுத்துகிறது. முக்கிய தயாரிப்புகளில் இன்டெலிஜென்ட் 4.0 வழிகாட்டி, நீருக்கடியில் இயங்கும் சுழற்சி இயந்திரம், பல நிரல் மில் திருப்பம், சிஎன்சி கிரைண்டர் மற்றும் சிஎன்சி இயந்திர மையம் ஆகியவை அடங்கும்.

இந்நிகழ்வில் தொழில்துறை சங்கங்கள், நிறுவனங்கள், டீலர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பார்வையாளர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள், தைவானிய கண்டுபிடிப்புகள் இந்தியாவின் உற்பத்தி நிலப்பரப்பில் எவ்வாறு புரட்சியை ஏற்படுத்தும் என்பதை விளக்கும் நேரடி செயல்விளக்கங்களில் ஈடுபடுவதை பார்வையாளர்கள் எதிர்நோக்கலாம்.

தைவானின் மிகவும் புதுமையான தயாரிப்புகளின் சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்காக தைவானின் பொருளாதார விவகார அமைச்சகத்தால் 1993 ஆம் ஆண்டு தைவான் சிறப்பு விருதுகள் நிறுவப்பட்டன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, வடிவமைப்பு, தரம் மற்றும் சந்தைப்படுத்தல், தைவானில் தயாரிக்கப்பட்டது என்ற நான்கு முக்கிய காரணிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும், தகுதியான தயாரிப்புகள் தங்கள் தயாரிப்புகளை மதிப்பிடும் கடுமையான தேர்வு செயல்முறைக்கு உட்படுகின்றன. தைவானின் சிறப்பு விருதுகள் தரம் மற்றும் வடிவமைப்பின் மதிப்புமிக்க சின்னமாக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன, இது தைவானின் ஈர்க்கக்கூடிய தயாரிப்பு புதுமையை திறம்பட வெளிப்படுத்துகிறது

# பொங்கல் கொண்டாட்டங்களுக்காக பிக் பாஸ் தமிழுடன் இணைந்த ஜோமாட்டோ

சென்னை ஜன.16– இந்தியாவின் ஆன்லைன் உணவு ஆர்டரிங் மற்றும் டெலிவரி தளமான ஜோமாட்டோ, இந்த பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக பிக் பாஸ் தமிழ் நிகழ்ச்சியுடன் இணைந்தது. பிக்பாஸ் நிகழ்ச்சியின் போட்டியாளர்களுக்காக தனித்துவமான சிறப்பு 'பொங்கல் விருந்து' வழங்க ஏற்பாடு




செய்த ஜோமாட்டோ, அவர்களுக்கு உரையாடலுடன் கூடிய ஒரு சுவாரஸ்யமான ஆர்டரிங் அனுபவத்தையும் அளித்தது.

போட்டியாளர்கள் ஒரு மகிழ்ச்சியான ஜோமாட்டோ தீமில் உருவான ஆர்டர் செயல்முறையில் பங்கேற்றனர்; அதனைத் தொடர்ந்து ஒரு சுவையான பொங்கல் விருந்தினையும் அருந்தி மகிழ்ந்தனர். உரையாடல் நிறைந்த இந்த புதிய முயற்சியின் மூலம் ஆர்டர் செய்வதை சந்தோஷமான அனுபவமாகவும், ஒவ்வொரு தருணங்களையும் ஸ்பெஷல் நினைவுகளாகவும் மாற்ற வேண்டும் என்கிற ஜோமாட்டோவின் உறுதிப்பாடு வெளிப்படுகிறது. அதுமட்டுமில்லாமல் சுவை மிகுந்த உணவுகளை பிக்பாஸ் தமிழ் வீட்டிற்குள் கொண்டு வரவும் ஜோமாட்டோ வழிவகுத்தது.

# ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் 3 வது ராக்கெட் ஏவுதளம் அமைக்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்

டெல்லி: ஜன.16– ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் 3 வது ராக்கெட் ஏவுதளம் அமைக்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மனிதனை விண்வெளிக்கு அனுப்புதல் உட்பட எதிர்கால திட்டத்திற்காக ஏவுதள திறனை அதிகரிக்கும் வகையில் 3வது ஏவுதளம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.3895 கோடி மதிப்பில், 48 மாதங்களில் 3வது ஏவுதளத்தை கட்டி முடிக்க திட்டமிட்டுள்ளதாக ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல் தெரிவித்துள்ளார்

மூன்றாவது ஏவுதளத் திட்டமானது, ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோவின் அடுத்த தலைமுறை ஏவுகணை வாகனங்களுக்காக ஏவுகணை உள்கட்டமைப்பை நிறுவுவதையும், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இரண்டாவது ஏவுதளத்திற்கான காத்திருப்பு ஏவுதளமாக ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது எதிர்கால இந்திய மனித விண்வெளிப் பயணங்களுக்கான ஏவுதளத் திறனையும் மேம்படுத்தும்.

செயல்படுத்தும் உத்தி மற்றும் இலக்குகள்:

TLP ஆனது NGLV மட்டுமின்றி, செமிக்ரியோஜெனிக் நிலை மற்றும் NGLV இன் அளவுகோல் உள்ளமைவுகளுடன் கூடிய LVM3 வாகனங்களையும் ஆதரிக்கக்கூடிய உலகளாவிய மற்றும் முடிந்தவரை பொருந்தக்கூடிய உள்ளமைவைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



முந்தைய ஏவுதளங்களை நிறுவுவதிலும், தற்போதுள்ள ஏவுகணை வளாக வசதிகளை அதிகபட்சமாக பகிர்ந்து கொள்வதிலும் இஸ்ரோவின் அனுபவத்தை முழுமையாகப் பயன்படுத்தி, அதிகபட்ச தொழில் பங்கேற்புடன் இது உணரப்படும். TLP ஆனது 48 மாதங்கள் அல்லது 4 வருட காலத்திற்குள் நிறுவப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை:

இந்தத் திட்டம், அதிக ஏவுதல் அதிர்வெண்கள் மற்றும் மனித விண்வெளிப் பயணம் மற்றும் விண்வெளி ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான தேசிய திறனை செயல்படுத்துவதன் மூலம் இந்திய விண்வெளி சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்தும்.

இன்றைய நிலவரப்படி, இந்திய விண்வெளி போக்குவரத்து அமைப்புகள் இரண்டு ஏவுதளங்களை முழுமையாக நம்பியுள்ளன. முதல் ஏவுதளம் இரண்டாவது ஏவுதளம் (ஷிலிறி). திலிறி ஆனது 30 ஆண்டுகளுக்கு முன்பு PSLVக்காக உணரப்பட்டது மற்றும் PSLV &SSLVக்கான ஏவுகணை ஆதரவைத் தொடர்ந்து வழங்குகிறது. எஸ்எல்பி முதன்மையாக ஜிஎஸ்எல்வி மற்றும் எல்விஎம்3க்காக நிறுவப்பட்டது.

மேலும் பிஎஸ்எல்விக்கான காத்திருப்பாகவும் செயல்படுகிறது. ஷிலிறி கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது, மேலும் சந்திரயான்3 மிஷன் உட்பட தேசியப் பணிகளுடன் பிஎஸ்எல்வி/ எல்விஎம்3 இன் சில வணிகப் பணிகளைச் செயல்படுத்துவதற்கான ஏவுதளத் திறனை மேம்படுத்தியுள்ளது. ககன்யான் பணிகளுக்காக மனித மதிப்பிடப்பட்ட LVM3 ஐ அறிமுகப்படுத்த SLP தயாராகி வருகிறது.

2035 ஆம் ஆண்டளவில் பாரதிய அந்தரிக்ஷ் நிலையம் (பிஏஎஸ்) மற்றும் 2040 ஆம் ஆண்டுக்குள் இந்தியக் குழுவான சந்திர தரையிறக்கம் உள்ளிட்ட அமிர்த காலின் போது இந்திய விண்வெளித் திட்டத்தின் விரிவாக்கப்பட்ட பார்வைக்கு புதிய உந்துவிசை அமைப்புகளுடன் கூடிய புதிய தலைமுறை கனரக ஏவுதல் வாகனங்கள் தேவை, அவை தற்போதுள்ள ஏவுதலால் பூர்த்தி செய்யப்படவில்லை.

அடுத்த 2530 ஆண்டுகளுக்கு வளர்ந்து வரும் விண்வெளிப் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அடுத்த தலைமுறை ஏவுகணை வாகனங்கள் மற்றும் ஷிலிறிக்கு ஒரு நிலைப்பாட்டை வழங்குவதற்காக மூன்றாவது ஏவுதளத்தை விரைவாக நிறுவுவது மிகவும் இன்றியமையாததாகும்.

# ஆர்.தவித் குமார்: ஐஎஸ்பிஎல் சீசன் 2 ல் சென்னை சிங்கம்ஸுக்காக மீண்டும் கர்ஜிக்கத் தயாராகும் உள்ளூர் ஹீரோ

சென்னை, 16 ஜன. ,2025: நகரத்தின் வளமான கலாச்சாரத்தைப் போலவே கிரிக்கெட்டும் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும் சென்னையின் பரபரப்பான தெருக்களில், ஆர். தவித் குமாரின் பயணம் மீள்தன்மை மற்றும் ஆர்வத்திற்கு ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டு. தெருகிரிக்கெட் விளையாடுவதன் மூலம் எளிமையான தொடக்கத்திலிருந்து சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் தோள்களைத் தேய்ப்பது வரை, தவித்தின் எழுச்சி விளையாட்டின் மாற்றும் சக்திக்கு ஒரு சான்றாகும்.

அடக்கமான தொடக்கங்கள்:

சென்னையில் பிறந்து



வளர்ந்த தவித்தின் கிரிக்கெட் பயணம் மிகவும் அடக்கமான முறையில் தொடங்கியது தெருக்களில் டென்னிஸ் பந்து கிரிக்கெட் விளையாடுவது. சரியான மைதானம் அல்லது உபகரணங்கள் இல்லாமல் போட்டிகளில் பங்கேற்க அவர் வழிகளைக் கண்டுபிடித்தார், சில சமயங்களில் கார்ப்பரேட் அலுவலக விளையாட்டுகளில் சேருவார்.

"எனக்கு சரியான மைதானம் கூட இல்லை. அருகில் ஒரு போட்டி நடந்தால், நான் சென்று விளையாடச் சொல்வேன்," என்று அவர் நினைவு கூர்ந்தார். "எனக்கு பந்துவீச்சு மிகவும் பிடித்திருந்தது. என்னிடம் காலணிகள் அல்லது சரியான பந்து இல்லாவிட்டாலும், நான் விளையாட விரும்பினேன்."

குறைந்த வளங்கள் இருந்தபோதிலும், இடது கை வேகப்பந்து வீச்சாளராக தவித்தின் இயல்பான திறமை தனித்து நின்றது. ஒரு வழிகாட்டி அவரைக் கவனித்து, சீசன்பால் கிரிக்கெட்டை முயற்சிக்க ஒரு வாய்ப்பை வழங்கினார்.

"நான் பந்து வீசுவதை அவர் பார்த்தார், நான் கிரிக்கெட் பந்து விளையாட விரும்புகிறேனா என்று கேட்டார். அதைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது, ஆனால் அதை முயற்சிக்க நான் உற்சாகமாக இருந்தேன். நான் நான்கு போட்டிகளில் விளையாடி நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினேன்," என்று தவித் பகிர்ந்து கொள்கிறார். "அந்த வாய்ப்பு எனது பந்துவீச்சில் பெரிய அளவில் ஏதாவது செய்ய முடியும் என்பதை எனக்கு உணர்த்தியது."

## சிந்தனைத்துளி

**சம்பாதிப்பு**

**சிலர் சம்பாதித்து**
**வாழ்கிறார்கள்**
**சிலர் சம்பாதிக்க**
**வாழ்கிறார்கள்**
**சிலர் வாழ்வதற்காக**
**சம்பாதிக்கிறார்கள்**
**வெகு சிலரோ**
**அடுத்தவர் சம்பாதியத்தில்**
**மகிழ்வாய் வாழ்கிறார்கள்.**



இசைப்பிரியன்
கே.சங்கர்,
பெருங்களத்தூர்..

"மாலையுகம்" நடுநிலை நாளிதழ் *தமிழ்நாடு மற்றும் *புதுச்சேரி மாநிலங்களில் அனைத்து மாவட்ட வாசகர்களையும் சென்றடைகிறது.

Owned and Published by MOHAMED IBRAHIM N0.6/30, Gulam Murthuza Street, Ellis Road, Chennai - 600 002 & Printed by E.SUDEESHKUMAR. at CHENNAI OFFSET PRINTERS 19/1.21/2.Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai-600 002. Editor MOHAMED IBRAHIM.